# இராம கோபாலன்

*நிறுவன அமைப்பாளர்*

59, அய்யா முதலித் தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-2.
தொலைபேசி : 044-28457676


29-5-2010

**சாலையோர கோயில்கள் அநாகரிகமான முறையில் அகற்றம்!**
**இது அதிகார துஷ்பிரயோகம்! இந்து முன்னணி இதனை வன்மையாகக் கண்டிக்கிறது!!**
**இந்து முன்னணி நிறுவன அமைப்பாளர் இராம கோபாலன் அவர்களின் பத்திரிகை அறிக்கை!**

நீதி மன்றம், போக்குவரத்துக்கு இடையூறாக இருக்கும் (முஸ்லீம், கிறிஸ்தவ, இந்து) வழிபாட்டுத்தலங்கள் மற்றும் சிலைகள் ஆகியவற்றை உரிய அவகாசம் கொடுத்தும், கௌரவமான முறையிலும், தகுந்த மாற்று ஏற்பாடு செய்து கொடுத்தும் அப்புறப்படுத்த முயலவேண்டும் என்று தனது தீர்ப்பில் அறிவுறுத்தியுள்ளது.

மேற்கண்ட நீதிமன்ற உத்தரவைக் காரணம் காட்டி இந்து கோயில்களை மட்டுமே இந்த அரசு குறிவைத்து இடித்து வருகிறது. இதனை ஏப்ரல் 13 அன்று தமிழகத் துணை முதல்வர் மாண்புமிகு மு.க. ஸ்டாலின் அவர்களைச் சந்தித்து மனு கொடுத்து, விவரித்தோம். துணை முதல்வர் அவர்களும் ஆவன செய்வதாகத் தெரிவித்தார்.

கடந்த இரண்டு நாட்களாக சென்னை அடையாறு, சாஸ்திரி நகர் பகுதிகளில் சில கிறிஸ்தவ அதிகாரிகள் தூண்டுதலினால் எத்தகைய முன்னறிவிப்பும் இல்லாமல் திடீரென்று பொக்ரைன் இயந்திரத்தைக் கொண்டு வந்து யாருமில்லாத நேரத்தில் ஆலயத்தில் சுவாமி சிலைகள் வழிபாட்டில் இருக்கும்போதே, சுவாமி சிலையோடு பல கோயில்கள் இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டு வருகின்றன. இது பக்தர்கள் மனதில் ஆழ்ந்த வேதனையை ஏற்படுத்தி வருகிறது. இந்த மக்கள் விரோதமான, ஜனநாயக விரோதமான செயலைத் துணிந்து கேட்கும் பக்தர்களைக் காவல்துறை பகிரங்கமாக மிரட்டுகிறது. இது நாகரிகமற்ற, சட்டத்தை மதிக்காத செயல்! இத்தகைய நடவடிக்கையை அரசு கைவிட வேண்டும். திட்டமிட்டு இத்தகைய அதிகார துஷ்பிரயோகம் செய்யும் அதிகாரிகளின் போக்கை அரசு கண்டிக்க வேண்டும்.

மத்திய அரசின் 1991 வழிபாட்டு பாதுகாப்புச் சட்ட வழிகாட்டுதலின்படி 1947இல் எத்தகைய வழிபாட்டில் இருக்கும் வழிபாட்டுத் தலங்களையும் பாதுகாப்பது அரசின் பொறுப்பாகும். இதனை மீறுவோர் மீது சட்டப்படியும் இந்து முன்னணி நடவடிக்கை எடுக்கும் என்று எச்சரிக்கிறோம்.

சென்னையில் ஏராளமான அரசியல் தலைவர்கள் சிலைகள்தான் போக்குவரத்துக்கு இடையூறாக வைக்கப்பட்டுள்ளன. தர்காக்களும், மசூதிகளும், மாதா சிலைகளும் சாலையை அடைத்து நிற்கின்றன. இவற்றின் ஒரு செங்கலைக்கூடத் தொடத் துணிவில்லாத அரசு! இந்து கோவில்களை மட்டும் பகல் கொள்ளையனைப்போல இடித்துத் தள்ளுவது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது!

இத்தகைய நடவடிக்கை தொடர்ந்தால், மக்களை ஒருங்கிணைத்து அரசினை எதிர்த்து இந்து முன்னணி போராட நேரிடும்! அரசின் காதுகளில் அந்தச் சாலையோரம் வாழும் ஏழை எளிய மக்களின் கூக்குரல் விழவில்லை எனில், தெய்வத்திடம் முறையிடுவதைத் தவிர வேறு வழியில்லை.

1984இல் மக்களின் திலகமாகப் போற்றப்பட்ட எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்தில் இத்தகைய நடவடிக்கையை அதிகாரிகள் எடுத்தனர். இதனால் பாதிக்கப்பட்ட அதிகாரிகள் பலர். எம்.ஜி.ஆர். அவர்களும் உடல்நிலை பாதிக்கப்பட்டார். எங்கெல்லாம் கோயில்கள் இடிக்கப்பட்டதோ அங்கெல்லாம் அவர் உடல் நலம் வேண்டி மீண்டும் எம்.ஜி.ஆரின் விசுவாசிகள் பிரார்த்தனை செய்து கோயில்களைக் கட்டிக் கொடுத்தனர். அப்படி கட்டப்பட்ட கோயில்களில் ஒன்றுதான் சென்னை உயர்நீதிமன்ற வாசலில் பிளாட்பாரத்தில் உள்ள 'நீதி கருமாரியம்மன் ஆலயம்!' அந்த நிலை இன்றைய ஆட்சியாளர்களுக்கு வரவேண்டுமா? சிந்திக்கட்டும்.

'அரசன் அன்று கொல்வான், தெய்வம் நின்று கொல்லும்' என்பது பழமொழி. இதனை உணர்ந்து அரசு செயல்படட்டும்! இத்தகைய அநாகரிக நடவடிக்கையைக் கைவிட இந்து முன்னணி வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

என்றும் தேசியப் பணியில்

**இராம கோபாலன்**

நிறுவன அமைப்பாளர்

**இந்த அறிக்கையைத் தங்கள் பத்திரிகையின் அனைத்து பதிப்புகளிலும் வெளியிட வேண்டுகிறோம்.**